# ஆண்டின் பொதுக்காலம் 26 ஆம் வாரம்

*திருவழிப்பாட்டு ஆண்டு* B *(27-09-2015)*

## இன்றைய நற்செய்தி வாசகங்கள்

1. எண் 11: 25~29
2. யாக்கோபு 5:1~6
3. மாற். 9:38~48

**திருப்பலி முன்னுரை:**

அன்புக்குரியவர்களே, ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது: அது புத்துயிர் அளிக்கின்றது. ஆண்டவரின் ஒழுங்குமுறை நம்பத்தக்கது: எளியவருக்கு அது ஞானம் அளிக்கின்றது. அன்புமிக்க சகோதர சகோதரிகளே! அனைவருமே இறைவாக்கினராகும்படி, தம் ஆவியை நமக்கு அளிக்கும் விண்ணகத் தந்தையின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று பொதுக்காலம் இருபத்தாறாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

ஆண்டவரின் நியமங்கள் சரியானவை என்னும் உண்மையை இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறுகின்றன. இறைவன் ஒவ்வெருக்கும் தமது விருப்பத்திற்கேற்ப கொடைகளையும், பணிகளையும் வழங்குகின்றார். ஆகவே ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை: அவை முற்றிலும் நீதியானவை. நாம் இதனை விசுவசித்து ஏற்றுக்கொண்டு வாழவேண்டும் என்பதே இன்று நமக்கு வழங்கப்படும் அழைப்பாக அமைகின்றது. இவ்வேளையில் நாமும் இறைவனுடைய திட்டங்களைச் சரியாகப் புரிந்து கொண்டு வாழவும், ஆண்டவரே உமது வார்த்தையே உண்மை உண்மையினால் எங்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும் என்னும் செபத்தை முழுமனதோடு எப்பொழும் நமக்குள்ளே செபித்து, இறைவனுக்குகந்த அர்ப்பண வாழ்வு வாழ இத்திருப்பலியில் வரங்கேட்டுச் செபிப்போம்.

**திருப்பலி முன்னுரை ~2**

கடவுளுக்குரியவர்களே,

பொதுக்காலத்தின் இருபத்தாறாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். நமது பாவ இயல்புகளைக் களைந்துவிட்டு கடவுளுக்கு உரியவர்களாக வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. உண்மை கடவுளை அறிந்துகொள்ளாத மற்றவர்கள் முன்னிலையில், கடவுளுக்கு சான்று பகர்பவர்களாக வாழவும், கிறிஸ்துவின் பெயரால் நற்செயல் புரிவோரை ஏற்றுக்கொள்ளவும் நாம் அழைக்கப்படுகிறோம். நமது உடல் உறுப்புகளைக் கொண்டு பாவம் செய்வதை விட, அவற்றை வெட்டி எரிந்துவிடுவதே நல்லது என்ற கடுமையான வார்த்தைகள் இயேசுவின் வாயில் இருந்து புறப்படுவதை இன்றைய நற்செய்தியில் காண்கிறோம். ஆண்டவரின் ஆவியைப் பெற்றவர்களாய், புனிதமான வாழ்வு வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**புனிதத்தின் ஊற்றாம் இறைவா,**

உமது திருச்சபையின் வழிகாட்டிகளாக நீர் தேர்ந்தெடுத்துள்ள எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், இவ்வுலகின் தீய வழிகளில் இருந்து விலகி, புனிதம் நிறைந்த வாழ்வு வாழத் தேவையான அருளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**இறைவாக்கினரை உருவாக்குபவராம் இறைவா,**

உமது திருச்சபையின் மக்கள் அனைவரும், உம்மைப் பற்றிய உண்மைகளுக்கு சான்று பகரும் இறைவாக்கினர்களாய் திகழ்ந்து, உலக மக்களை மனந்திருப்பத் தேவையான ஆர்வத்தையும் உற்சாகத்தையும் அளிக்க வேண்டுமென்றும், உண்மை கடவுளாகிய உம்மைப் புறக்கணித்து வாழும் எம் நாட்டு மக்கள் அனைவரும், உமது மேலான வல்ல செயல்களாலும், அகத் தூண்டுதலாலும் உம்மை அறிந்து ஏற்றுக் கொள்ளத் தேவையான உதவிகளை செய்ய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**விடுதலை அளிப்பவராம் இறைவா,**

உலக மக்களிடையே நிலவும் தீய நாட்டங்கள், பயங்கரவாதப் போக்குகள், வன்முறை ஆர்வங்கள், பழிவாங்கும் எண்ணங்கள் ஆகியவற்றைக் களைந்து, நீதியும் அன்பும் அமைதியும் நிலவும் சூழல் உருவாக உதவ வேண்டுமென்றும், எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், உமது ஆவியைப் பெற்றவர்களாய் தூய வாழ்வு வாழ்ந்து, பிறர் முன்னிலையில் உமக்கு சான்று பகரும் இறைவாக்கினர்களாய் திகழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**இரக்கத்தின் தந்தையே இறைவா!**

நாங்கள் உமது திட்டங்களைச் சரியாகப் புரிந்து கொண்டு வாழவும், ஆண்டவரே உமது வார்த்தையே உண்மை உண்மையினால் எங்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும் என்னும் செபத்தை முழுமனதோடு எப்பொழும் எமக்குள்ளே செபித்து உமக்குகந்த அர்ப்பண வாழ்வு வாழ வரமருள வேண்டு மென்றும், உலகப் பொருட்கள் மீதும், செல்வத்தின் மீதும் நாட்டம் கொள்ளும் எமது தீய நாட்டங்களிலிருந்து நாம் விடுதலை பெற்று, இறையரசையும், உமக்கு ஏற்புடையதையும் நாம் நாடித் தேட அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நலமானதை அருளும் தந்தையே!**

எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் தன்னலத்தினைக் களைந்து, சமூக நலத்திலும், எளியவர்களின் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர்களாய் வாழ்ந்து, இறையாட்சிக்குரிய சமத்துவ, சகோதரத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உதவ வேண்டுமென்றும், நோய்கள் நீங்கிப் பஞ்சம் ஒழியவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும், பயணம் செய்வோர் நலமாக நாடு திரும்பவும், நோயுற்றோர் நலம் பெறவும், இறக்கின்றவர் மீட்பின் நிறைவு பெறவும்,வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நலந்தரும் ஊற்றாம் இறைவா,**

உம்மை நம்பிக்கையோடு தேடி வரும் மக்களின் உடல் நோய்களையும், மன நோய்களையும் முழுமையாக குணப்படுத்தி, மற்றவர்களின் முன்னிலையில் உமது மாட்சிமிகு செயல்களின் சாட்சிகளாக அவர்களை மாற்ற வேண்டுமென்றும், உம் திருமகன் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும் ஏற்றத்தாழ்வற்ற கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்குபவர்களாய் வாழும் அருளை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மேலும் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நீதியின் நாயகராம் இறைவா,**

உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும் அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டு மென்றும், உம் திருவுளத்தை உணர்ந்தவர்களாய், நீதியின் வழியில் நன்மை செய்பவர்களாக வாழத் தேவையான அருள் வரங்களை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மீதும் பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**இளையோருக்காக :**

வளங்களை வாரி வழங்கி உள்ளங்களை நெறிப்படுத்தும் இறைவா! இச்சமுதாய முன்னேற்றத்தில் உறுதுணையாக இருக்கும் இளையோரை நிறைவாக ஆசீர்வதித்து அவர்கள் இத்திருச்சபையின் வருங்காலத்தூண்களாக மாறவும், அருள் வாழ்விலும், உலகவாழ்விலும் செயலாற்றும் நம்பிக்கைக் கொண்டவராய் வாழ தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.